**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 41/2014**

Deposition of **P.W.-3** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. Maheshraja, Gr. III Bench Clerk of this court, on 26.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரம் | Father's Name | : சுப்ரமணி |
| Village | : பனைமடல் | Taluk | : பெத்தநாயக்கன்பாளையம் |
| Calling | : V.A.O | Age | : 37 |

துவக்க நேரம் : 12.20 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1) நீதிமன்றத்திலிருந்து அனுப்பட்ட அழைப்பாணையில் தாவா சொத்தை வாதிகள் அனுபவம் செய்வது குறித்தும், உரிமை குறித்தும், வருவாய்துறை ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை நேரில் பார்வையிட்டு களப்பணி செய்து, சாட்சியம் அளிக்க வேண்டுமென அழைப்பாணையில் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் எந்த தேதியில் பார்வையிட்டேன் என்றால் கடந்த 01.08.2025 அன்று நேரில் சென்று பார்வையிட்டேன். அவ்வாறு நேரில் பார்வையிட்டதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2) இவ்வழக்கின் வாதி, பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை நேரில் பார்வையிட வருவதாக முன்னறிவிப்பு எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். வாதி இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் பிரதிவாதிகளான அழகம்மாள், லட்சுமியை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பின்பு தாவா சொத்தை பார்வையிட வேண்டி வருவாய் வட்டாட்சியரிடமிருந்து முன் அறிவிப்பு பெற்றேனா என்றால் அவ்வாறு பெற அவசியம் இல்லை. நீதிமன்ற அழைப்பாணை கிடைக்கப்பெற்ற பின்பு வழக்கின் தரப்பினர்களிடம் தாவா சொத்து தொடர்பான உரிமை ஆவணங்களை ஒப்படைக்க வேண்டி

அறிவிப்பு எதுவும் வழங்கினேனா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் தாவா சொத்தை நேரில் பார்வையிடவில்லை என்றால் சரியல்ல, பார்வையிட்டேன். நான் தாவா சொத்தை நேரில் சென்று பார்வையிடாமல் தட்சிணாமூர்த்தி என்பவர் சுவாதீனத்தில் இருப்பதாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) தாவா சொத்தானது இறந்தபோன அய்யன்பெருமாள் என்பவரின் வாரிசுகளின் கூட்டு அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றாலும் நான் இறந்துபோன அன்புகரசின் வாரிசுகள் சுவாதீனத்தில் இருப்பதாக தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள Ex.X1- அ பதிவேட்டில் ச.எண்.208/3-ல் உள்ள நிலமானது அய்யம்பெருமாள் படையாட்சி பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். Ex.X2- சிட்டாவில் இருசப்ப படையாட்சி, அய்யம்பெருமாள் படையாட்சி, அன்புக்கரசு ஆகியோர்கள் இறந்துவிட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ஆனால், சிட்டாவில் அது பற்றி குறிப்பிடுவது வழக்கம் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் இறந்துபோன நபர்களின் பெயர்களையும் இறந்துவிட்டார் என்ற பின்குறிப்புடன் குறிப்பிடுவதுதான் வழக்கம் என்றால் சரியல்ல.

4) பொதுவாக இறந்துபோன நபர்களிலிருந்து வாரிசுகள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்படும்போது இறந்தபோன நபரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் மற்றும் உரிமை சான்று ஆகியவைகளை சரிபார்த்தும் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் பொது மக்களை விசாரணை செய்த பின்னர்தான் மாற்றம் செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவைகளை சரிபார்த்து மண்டல துணை வட்டாட்சியரால் பட்டா மாறுதல் செய்யப்படும். நான் சொல்வது தவறு என்றாலும் அனைத்து வாரிசுகளுக்கும் அறிவிப்பு கொடுத்து விசாரணை செய்த பின்னரே பட்டா மாறுதல் செய்யப்படுவதற்கான சட்ட நடைமுறை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தின் பட்டா அன்புகரசு பெயருக்கு மாற்றம்படுவதற்கு முன்பு அய்யம்பெருமாள் இறப்புச்சான்றும் மற்றும் வாரிசு சான்று ஆகியவைகளை சரிபார்த்த பின்னர்தான் வழங்கப்பட்டதா என்று என்னால் கூறமுடியுமா என்றால் கூறமுடியாது. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள Ex.X2-வில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறை ஆணை TR.5124/6I-ஐ

நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் மாணிக்க படையாட்சி மகன் அன்புகரசு பெயருக்கு தாவா சொத்து பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்பதை மேற்படி செயல்முறை ஆணையை பார்த்தால்தான் கூறமுடியும் என்று சொன்னால் சரிதான். மேற்படி செயல்முறை ஆணை ஆவணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் அன்புகரசு மகன் தட்சிணாமூர்த்தி பெயரில் எந்த ஆவணத்தில் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்பதை அதற்குண்டான செயல்முறை ஆணையான TR.2020/103 dt.10.06.2020 ஆவணத்தை பார்த்தால்தான் கூறமுடியும் என்றால் சரிதான். செயல்முறை ஆணை TR.5124/6I-ல் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6) Ex.X2-வில் 83 காலி என்றும் பட்டா எண் என்ற இடத்தில் 10525-க்கு போக்கு என்றும் குறிப்பிடப்பட்டதற்கான விளக்கம் எதுவும் இல்லை என்றால் பொதுவாக பழைய பட்டா எண்ணை காலி என்றும் மாறுதல் செய்யப்பட்ட பட்டா எண்ணை போக்கு என்றும் குறிப்பிடுவது வழக்கம். அவ்வாறு யாரால் மேற்படி குறிப்புகள் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. மாணிக்கப்படையாட்சி மகன் அன்புகரசு பெயருக்கும், அன்புகரசு மகன் தட்சிணாமூர்த்தி பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது முறையான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றாலும் எனவே அந்த உத்தரவுகள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தவறான பட்டா மாறுதல் உத்தரவு அடிப்படையில் Ex.X3,X4 ஆவணங்களில் தட்சிணாமூர்த்தி பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல.

முடிவு நேரம்: 01.03 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.41/2014, Dt.26.08.2025.